5 ஆண்டு கொண்டாட்டம்

# தேச பக்தி
DHESA BAKTHI
நடுநிலை காலை நாளிதழ்

தேச பக்தி நாளிதழில் விளம்பரம் செய்வீர்! பயன் பெறுவீர்! தொடர்புக்கு : 98848 34828

RNI.No.TNTAM/2022/86012
ஆசிரியர் K.லோகநாதன் ☎ 98848 34828 / 90030 55587

●மலர் : 5 இதழ் : 038 ●03.06.2026 ●தமிழ் நாளிதழ் ●புதன்கிழமை ●பக்கம் - 4 ●விலை ரூ.5/- சென்னை
●Vol : 5 Issue : 038 ●03.06.2026 ●Tamil Daily ●Wednesday ●Page - 4 ●Price Rs. 5/- Chennai

## என்னதான் சண்டை போட்டாலும்.. மத்திய அரசுடன் முதல்வர் விஜய் போட்ட டீல்! சுளையா 2,177 கோடி கிடைக்கும்!




**சென்னை:**

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய், மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல் ஆகியோர் முன்னிலையில் உயிர் நீர் இயக்கம் (ஜல் ஜீவன் மிஷன்) 2.0 செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசிற்கும், ஒன்றிய அரசிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் தமிழக அரசுக்கு ரூ.2,177.27 கோடி நிதி கிடைக்கப்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் இன்று (2.6.2026) சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்தும், மத்திய அரசின் ஜல் சக்தித் துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல் டெல்லியிலிருந்தும் காணொலிக் காட்சி வாயிலாகக் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இருவர் முன்னிலையில் உயிர் நீர் இயக்கம் (ஜல் ஜீவன் மிஷன்) 2.0 திட்டத்தின் நீட்டிக்கப்பட்ட செயலாக்கக் காலத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்திடப்பட்டது. உயிர் நீர் இயக்கம் (ஜல் ஜீவன் மிஷன்) திட்டம் முதற்கட்டமாக 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது.

**ஜல் ஜீவன் மிஷன்**

தற்போது ஒன்றிய அரசினுடைய அமைச்சரவையின் ஒப்புதலின் அடிப்படையில் இத்திட்டம் 2028 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்தின் தேசிய ஜல் ஜீவன் மிஷன் (NJJM) மற்றும் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழுவின் (SLSSC) ஒப்புதலுடன் தமிழ்நாட்டிலுள்ள 46.71 இலட்சம் வீட்டு (Functional Household Tap Connections) வழங்கப்பட்டு, 1.86 கோடி மக்கள் பயன்பெறும் வகையில், 45 புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் (Multi Village Schemes MVS), 56 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல் (Retrofitting CWSS) மற்றும் 21,258 ஒற்றைக் கிராமத் திட்டங்கள் (Single Village Schemes SVS) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழக அரசு**

முதற்கட்ட உயிர் நீர் இயக்கத் திட்டத்தின் கீழ், ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் மதிப்பீடு ரூ.18,123.05 கோடி ஆகும். இதில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.9,025.68 கோடி மற்றும் தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.9,097.37 கோடி ஆகும். உயிர் நீர் இயக்கம் (ஜல் ஜீவன் மிஷன்) 2.0 திட்டத்தின் நீட்டிக்கப்பட்ட செயலாக்கக் காலத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) இன்று கையெழுத்திடப்பட்டதன் மூலம், ஒன்றிய அரசின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையால் (DDWS) தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய தொகையில் முதற்கட்டமாக ரூ.2,177.27 கோடி நிதி கிடைக்கப்பெறும்.

**மத்திய அரசு**

உயிர் நீர் இயக்கத் (ஜல் ஜீவன் மிஷன்) திட்டம் 2028 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டிருப்பது, கிராமப்புறங்களில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் பாதுகாப்பான, போதுமான மற்றும் நிலையான குடிநீர் வழங்கலை உறுதி செய்வதில் மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் கொண்டுள்ள தொடர்ச்சியான உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது.

**ஜல் சக்தி துறை**

இந்த நிகழ்ச்சியில் டெல்லியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மத்திய ஜல் சக்தி மற்றும் இரயில்வே துறை இணை அமைச்சர் வி. சோமன்னா, மத்திய அரசின் ஜல்சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை செயலாளர் அசோக் கே.கே. மீனா, டெல்லி தமிழ்நாடு இல்லத்தின் தலைமைஉள்ளுறை ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ஆர். ஜெயா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மதிமுகவை சேர்க்காதீங்கன்னு படிச்சு படிச்சு சொன்னேன், கேட்டீங்களா.. திமுக முன்னாள் நிர்வாகி ஆதங்கம்!

**சென்னை:**

திமுக சின்னத்தில் போட்டியிட்டது துரதிருஷ்டமாம். மானம், வெட்கம், ரோசம் இருந்திருந்தால் அப்பொழுதே உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட மாட்டோம் என்று கூறிவிட்டு, கூட்டணியை விட்டு வெளியே வந்து தொலைச்சுருக்கலாமேஎன துரை வைகோவை முன்னாள் திமுக நிர்வாகி கே எஸ் ராதாகிருஷ்ணன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

வைகோ மற்றும் அவரது மகன் துரை வைகோ உள்ளிட்டோர் தற்போது விஜய்க்கு ஆதரவாக செயல்படுவது அவர்களின் அரசியல் சந்தர்ப்பவாதத்தை காட்டுகிறது. இதுகுறித்து நான் முன்பே எச்சரித்திருந்தேன். ஆனால் என் கருத்து கேட்கப்படவில்லை. அதன் விளைவுகளை தற்போது அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது‘ என்றும் கே.எஸ். ராதாகிருஷ்ணன் விமர்சித்துள்ளார். நேற்று திருச்சி வந்த முதல்வர் விஜய்யை வரவேற்ற துரை வைகோ, உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டது துரதிருஷ்டவசமானது என பேசியிருந்தார்.

2026 சட்டசபை தேர்தல் முடிவுகள், தமிழக அரசியல் களத்தை முற்றிலுமாக மாற்றிப் போட்டுள்ளது. விஜய் முதல்வராக பொறுப்பேற்றுள்ள நிலையில், திமுக கூட்டணியில் இருந்த சில கட்சிகள் தவெக அரசுடன் நெருக்கம் காட்டி வருகின்றன. அந்த வகையில், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மதிமுக, அண்மைக்காலமாக தவெக அரசுக்கு ஆதரவான அணுகுமுறையை கடைப்பிடித்து வருவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது.

தனி சின்னத்தில் போட்டியிட்டு இருந்தால்.. முதல்வர் பதவியேற்ற உடன் விஜய் ஸ்டாலின், வைகோ, அன்புமணி உள்ளிட்ட அரசியல் தலைவர்களை நேரில் சந்தித்தார். குறிப்பாக மதிமுக பொதுச்செயலாளரை அவரது இல்லத்தில் விஜய் சந்தித்த போது வைகோ மிகுந்த உற்சாகத்தில் காணப்பட்டார். அதோடு வீட்டில் உள்ள பணிப்பெண்களையும் விஜய்யிடம் அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் தவெக அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பினையும் மதிமுக எம்எல்ஏக்கள் புறக்கணித்தது அரசியலில் கவனத்தை ஈர்த்தது.

அதேபோல், நேற்று திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்காக சென்ற முதல்வர் விஜய்யை, திருச்சி தொகுதி எம்பியும் வைகோவின் மகனுமான துரை வைகோ விமான நிலையத்தில் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ‘உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டது துரதிர்ஷ்டவசமானது. தனி சின்னத்தில் போட்டியிட்டிருந்தால் தவெகவுக்கு ஆதரவு அளித்திருக்கலாம்‘ என்ற கருத்தை தெரிவித்திருந்தார். மானம், வெட்கம், ரோசம் இருந்திருந்தால் ‘உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டது துரதிர்ஷ்டம் என கூறுபவர்கள், அப்போதே கூட்டணியில் இருந்து வெளியேறியிருக்கலாம். இன்று இப்படி பேசுவது அரசியல் நாகரிகத்திற்கு பொருத்தமல்ல‘ என்று முன்னாள் திமுக நிர்வாகி கே.எஸ். ராதாகிருஷ்ணன் துரை வைகோவை கடுமையாக விமர்சித்துள்ளார். இது குறித்து அவர் கூறியிருப்பதாவது:

திமுக சின்னத்தில் போட்டியிட்டது துரதிருஷ்டமாம். மானம் வெட்கம் ரோசம் இருந்திருந்தால் அப்பொழுதே உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட மாட்டோம் என்று கூறிவிட்டு, கூட்டணியை விட்டு வெளியே வந்து தொலைச்சுருக்கலாமே.. இந்நேரம் திமுக வெற்றி பெற்றிருந்தால் இவர் இப்படி பேட்டி கொடுத்திருப்பாரா.. வைகோ அவர்களுக்காவது நீண்ட அரசியல் பாரம்பரியம் பின்புலம் இருக்கிறது. தந்தையின் புகழில் குளிர் காயும் அவரின் மகன் போன்றவர்கள் வாய்த்துடுக்கோடு பேசுவது நல்லதல்ல.. அழிந்துபோன உங்க கட்சிக்கு உயிர்கொடுத்தவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தன்னுடைய தொகுதிக்கு வருகை புரிந்த முதல்வரை வரவேற்று பொன்னாடை அணிவித்தது அரசியல் நாகரீகம். நடைமுறை என்று கூட சொல்லலாம். ஆனால் நாங்கள் சொந்த சின்னத்தில் போட்டியிடாமல் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு விட்டோம், ஆகவே த.வெ.க.விற்கு ஆதரவு அளிக்க முடியவில்லையே என்று வருந்துகிறோம் என்று பேட்டி கொடுப்பது என்ன நியாயம் என்று தெரியவில்லை. தி.மு.க.வைப் பற்றியும், கலைஞரைப் பற்றியும், ஸ்டாலின் அவர்களைப் பற்றியும், உங்கள் தந்தை வைகோ பேசாத பேச்சா. அத்தனை ஏச்சு பேச்சுக்களையும் மறப்போம், மன்னிப்போம் என்று புறந்தள்ளி விட்டு முற்றாக அழிந்து போன உங்கள் கட்சிக்கு உயிர்கொடுத்தவர் திமுக என்பதை மறந்து விடாதீர்கள். பணத்திற்கும் பதவிக்கும் நேரத்திற்கு தக்க வேஷம் போடுபவர்களை காலம் புறந்தள்ளும். நாளை தமிழக அரசியல் வரலாறு எழுதப்படும் போது வருகிற இளம் தலைமுறை உங்களை எள்ளி நகையாடும்‘ என்று தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். நான் முன்பே எச்சரித்திருந்தேன் மற்றொரு பதிவில், ‘வைகோ மற்றும் அவரது மகன் துரை வைகோ உள்ளிட்டோர் தற்போது விஜய்க்கு ஆதரவாக செயல்படுவது அவர்களின் அரசியல் சந்தர்ப்பவாதத்தை காட்டுகிறது. இதுகுறித்து நான் முன்பே எச்சரித்திருந்தேன். ஆனால் என் கருத்து கேட்கப்படவில்லை. அதன் விளைவுகளை தற்போது அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது‘ என்றும் கே.எஸ். ராதாகிருஷ்ணன் விமர்சித்துள்ளார். அவரது இந்த கருத்துகள், திமுக மதிமுக உறவு மற்றும் எதிர்கால கூட்டணி அரசியல் குறித்து புதிய விவாதங்களை ஏற்படுத்தியுள்ளன.

இப்படி அடுத்தடுத்து தவெகவுக்கு ஆதரவாக மதிமுக பேசி வருவதால், திமுக கூட்டணியில் இருந்து விலகி தவெகவுடன் கூட்டணி அமைக்க போவதாக பேச்சுக்கள் சமூக வலைத்தளங்களில் எழுந்தன. ஆனால் இதனை வைகோ மறுத்துள்ளார். அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க மாட்டோம் எனவும், வரும் 27 ஆம் தேதி பொதுக்குழு கூட்டத்தில் முடிவு செய்வோம் என்றும் விளக்கம் அளித்தார்.





## இந்திய துணை குடியரசுத் தலைவரை சந்தித்த தென்னாப்பிரிக்க துணை அதிபர்.

புதுடெல்லியில் உள்ள துணை குடியரசுத் தலைவர் இல்லத்தில், தென்னாப்பிரிக்காவின் துணை அதிபர் ஷிபோகோசா பவுலஸ் மாஷாதிலே, இந்திய துணை குடியரசுத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களை நிமித்தமாக சந்தித்து பேசினார்.

இரு நாடுகளுக்கிடையேயான உறவுகள், ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த விவகாரங்கள் குறித்து இந்த சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது




மதுரை மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றுள்ள **திரு. ப. ஆகாஷ், இ.ஆ.ப.,** அவர்களை, தினதமிழகம் நாளிதழின் மதுரை மாவட்டச் செய்தியாளரும், தமிழ்நாடு உழைக்கும் செய்தியாளர்கள் சங்கத்தின் மாநில செய்தி தொடர்பாளருமான **திரு.ம.அஜித்குமார்** அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்.

எண்: 56/2026 நாள் : 02.06.2026

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**
**எண்.3, தேர்வாணையச் சாலை , சென்னை – 600 003.**
**செய்தி வெளியீடு**

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள்–II (தொகுதி–IIA பணிகள்) (அறிவிக்கை எண்.08/2024, நாள்.20.06.2024 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) தேர்வில் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தெரிவிற்கான ஆறாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு 10.06.2026 நாளன்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்), சென்னை – 600 003–ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல், தேர்வாணைய இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளது. மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான நாள், நேரம் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய அழைப்பாணையினை, தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான (www.tnpsc.gov.in)–லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் தேர்வர்களுக்கு, அதற்கான விவரம் குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்னஞ்சல் (E–mail) மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான அழைப்பாணை தனியே அஞ்சல் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவரும் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்பட்டு, தெரிவு செய்யப்படுவார்கள் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. தேர்வர்கள் மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் கலந்துகொள்ளத் தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திரு.பானோத் ம்ருகேந்தர் லால். இ.ஆ.ப.,
செயலாளர்



## ஆட்சியர் வந்தனா கார்க்கை சந்தித்த தவெக தெற்கு மாவட்ட செயலாளர் பாரதிதாசன் வளர்ச்சி திட்டங்கள் குறித்து கலந்துரையாடல் 100க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் பங்கேற்பு

**திருவண்ணாமலை: ஜூன் 2, 2026**

திருவண்ணாமலை மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றுள்ள வந்தனா கார்க்கை, தமிழ்நாடு வெற்றிக் கழகத்தின் (தவெக) திருவண்ணாமலை தெற்கு மாவட்ட செயலாளரும், வழக்கறிஞருமான பாரதிதாசன் தலைமையிலான நிர்வாகிகள் குழு நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்ததுடன், மாவட்ட வளர்ச்சி மற்றும் பொதுமக்கள் நலன் தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்தும் கலந்துரையாடினர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில், பாரதிதாசன் புதிய பொறுப்பை ஏற்ற ஆட்சியர் வந்தனா கார்க்கிற்கு பூங்கொத்து மற்றும் சால்வை வழங்கி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, அவருடன் வந்திருந்த கட்சி நிர்வாகிகள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளை மாவட்ட ஆட்சியருக்கு அறிமுகப்படுத்தினார்.

சந்திப்பின் போது, திருவண்ணாமலை மாவட்டத்தின் அடிப்படை கட்டமைப்பு மேம்பாடு, குடிநீர் வசதி, சாலை பணிகள், கிராமப்புற வளர்ச்சி திட்டங்கள், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் கல்வி சார்ந்த முன்னேற்ற நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு பொதுநல அம்சங்கள் குறித்து கருத்துப்பரிமாற்றம் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

மேலும், மாவட்ட நிர்வாகத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையே சிறந்த ஒருங்கிணைப்பை உருவாக்கி, மக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளை உரிய முறையில் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல தவெக நிர்வாகிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக பாரதிதாசன் தெரிவித்தார்.

அப்போது உடன் இருந்த நிர்வாகிகள், பாரதிதாசனின் அரசியல் மற்றும் சமூகப் பணிகள் குறித்தும் ஆட்சியரிடம் எடுத்துரைத்தனர். விஜய் மக்கள் இயக்கத்தின் தொடக்க காலத்திலிருந்தே செயல்பட்டு வந்த அவர், தற்போது தமிழ்நாடு வெற்றிக் கழகத்தின் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட செயலாளராக பொறுப்பு வகித்து வருவதோடு, செங்கம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு மக்களிடையே தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார் என்றும் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. எம். சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளையும் பாரதிதாசன் சந்தித்து மரியாதை நிமித்தமாக வாழ்த்து தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கமலா பீடம் நிறுவனர் சீத்தா சீனுவாசன், மாமன்ற உறுப்பினர் டாக்டர் பழனி, தானிப்பாடி தொழிலதிபர் ஆஜாக் எஸ்.ஆர்.ஜெ உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். மேலும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த 100க்கும் மேற்பட்ட தவெக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பங்கேற்று புதிய மாவட்ட ஆட்சியருக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

புதிய மாவட்ட ஆட்சியரின் தலைமையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் வளர்ச்சி திட்டங்கள் மேலும் விரைவுபெற்று, மக்கள் நலப் பணிகள் தீவிரமாக செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையை நிர்வாகிகள் வெளிப்படுத்தினர். இந்த மரியாதை சந்திப்பு மாவட்ட அரசியல் மற்றும் நிர்வாக வட்டாரங்களில் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்தது.



## விதிமீறிய 8 கல்குவாரிகள் மீது அதிரடி நடவடிக்கை ட்ரோன் ஆய்வில் முறைகேடு அம்பலம்; அபராதம் விதிக்க தொடர் நடவடிக்கை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் எச்சரிக்கை

**திருவண்ணாமலை: ஜூலை 2, 2026**

தமிழகம் முழுவதும் செயல்பட்டு வரும் கல்குவாரிகளில் விதிமீறல்கள் உள்ளதா என்பதை கண்டறிய சோதனை நடத்தவும், அரசால் அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள் மட்டுமேகுவாரி பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், விதிமீறலில் ஈடுபடும் குவாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் கல்குவாரிகளில் ஆளில்லா விமானம் மற்றும் டி.ஜி.பி.எஸ். (ம்ஷெலிஜள ழிஜ ம்றூஷீணறீ றீற்ஷெஸளதீ) தொழில்நுட்பங்கள் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் விரிவான அளவீட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் போது, சில குவாரிகள் குத்தகை உரிமம் வழங்கப்பட்ட எல்லைக்கு அப்பால், உரிய அரசு அனுமதியின்றி கனிமங்களை வெட்டி எடுத்திருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து, இயற்கை வளங்கள் துறை அமைச்சரின் உத்தரவின்படியும், மாவட்ட நிர்வாகத்தின் கண்காணிப்பின் பேரிலும், அரசு அனுமதியின்றி கனிமங்கள் வெட்டி எடுத்துச் சென்றதாக கண்டறியப்பட்ட 8 கல்குவாரிகளின் செயல்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், சம்பந்தப்பட்ட குவாரி உரிமையாளர்கள் மீது அபராதம் விதிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், சட்டப்படி தேவையான தொடர் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசு அனுமதி வழங்கப்பட்ட எல்லைக்கு அப்பால் கனிமங்கள் வெட்டியெடுக்கப்படுவது அல்லது விதிமீறல்கள் மேற்கொள்ளப்படுவது கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் எச்சரித்துள்ளார்.





## குயின்ஸ் ஆஃப் மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி சார்பில் தற்காப்புக் கலை விழிப்புணர்வு

### கலை விழிப்புணர்வு நிகழ்ச்சி

**செங்குன்றம்: ஜூன் 03, 2026**

மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், கிராண்ட் லைன் ஊராட்சியில் உள்ள தொன்போஸ்கோ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், குயின்ஸ் ஆஃப் மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி சார்பில் தற்காப்புக் கலை விழிப்புணர்வு நிகழ்ச்சி குயின்ஸ் ஆஃப் மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமியின் நிறுவனரும் தலைமைப் பயிற்சியாளருமான பி.மகேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சுமார் 200க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டு, தற்காப்புக் கலையின் நுணுக்கங்களான கராத்தே, சிலம்பம், நுஞ்சக்கு, ஓடு உடைத்தல் மற்றும் தீயைக் கொண்டு நிகழ்த்தப்படும் சாகசங்கள் போன்றவை நடைபெற்றன.

சிறப்பு அழைப்பாளர்களாக தமிழக வெற்றிக் கழகத்தின் புழல் ஒன்றியச் செயலாளர் என்.எஸ். மைக்கேல், 29வது வார்டு வடசென்னை மாவட்ட செயலாளர் கே.வி.பாஸ்கர் மற்றும் பள்ளியின் தாளாளர் ஜான் கிறிஸ்டி ஆகியோர் கலந்து கொண்டு, தற்காப்புக் கலையில் விழிப்புணர்வு ஏற்படுத்திய வீரர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இதில் தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள், பெற்றோர்கள், அகாடமியின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி) சின்னக்கலையம்புத்தூர், பழனி.

2026 2027 ஆம் கல்வி ஆண்டில் மாணவியர் சேர்க்கைக்கான கலந்தாய்வு 01.06.2026 அன்று நடைபெற்றது. சிறப்பு ஒதுக்கீட்டிற்கான மாணவியர் சேர்க்கையினை கல்லூரியின் தாளாளர் / திருக்கோயிலின் இணைஆணையர் அவர்கள் மற்றும் கல்லூரியின் செயலர் / திருக்கோயிலின் துணைஆணையர் அவர்களும் துவக்கி வைத்தார்கள்.

## போதைப்பொருள், கள்ளச்சாராய ஒழிப்பில் தீவிர கண்காணிப்பு சாலை விபத்துகளை குறைக்க ஒருங்கிணைந்த நடவடிக்கை மேற்கொள்ள ஆட்சியர் வந்தனா கார்க் உத்தரவு

**திருவண்ணாமலை: ஜூன் 1, 2026**

திருவண்ணாமலை மாவட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பு, கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபான விற்பனையை தடுப்பது, சட்டம் ஒழுங்கு பாதுகாப்பை வலுப்படுத்துவது மற்றும் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில் திங்கள்கிழமைநடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற இந்த ஆய்வுக்கூட்டத்தில், மாவட்டம் முழுவதும் கள்ளச்சாராயம் மற்றும் தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்களின் விற்பனை மற்றும் கடத்தலை கண்காணித்து கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. மேலும், மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு நிலையை சீராக பராமரிப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.



கூட்டத்தில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க், காவல்துறையினர், வருவாய் வட்டாட்சியர்கள், கிராமநிர்வாக அலுவலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் இணைந்து சந்தேகத்திற்கிடமான பகுதிகள், பேருந்து நிலையங்கள், பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்களுக்கு அருகிலுள்ள இடங்கள், கிராமப்புற பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொண்டு கண்காணிப்பை வலுப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேலும், மாவட்டத்தில் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்கும் வகையில் தொடர் விபத்துகள் நடைபெறும் இடங்களை அடையாளம் கண்டு, அங்கு எச்சரிக்கை பலகைகள் மற்றும் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். வாகன ஓட்டிகள் போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடித்து பாதுகாப்பாக வாகனங்களை இயக்குவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தீவிரப்படுத்து மாறும் சம்பந்தப் பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் இராம்பிரதீபன், செய்யாறு சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் சிவா, உதவி ஆணையர் (கலால்) செந்தில்குமார், வட்டாட்சியர்கள், வட்டார போக்குவரத்து அலுவலர்கள், போக்குவரத்து துறை அதிகாரிகள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## அருள்மிகு ஸ்ரீ நாகாத்தம்மன் ஆலயத்தில் புதியதாக ஸ்ரீ ஆதிவெங்கடேச பெருமாள் மற்றும் ஸ்ரீ மஹாலட்சுமி, ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீ கருடாழ்வார், ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் ஆகிய தெய்வங்கள் பிரதிஷ்டையுடன் நூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

**செங்குன்றம்: ஜீன் 03, 2026**

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி கோமதியம்மன் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ நாகாத்தம்மன் ஆலயத்தில் புதியதாக ஸ்ரீ ஆதிவெங்கடேச பெருமாள் மற்றும் ஸ்ரீ மஹாலட்சுமி, ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீ கருடாழ்வார், ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் ஆகிய தெய்வங்கள் பிரதிஷ்டையுடன் நூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் திருவிழா ஆலய நிர்வாகிகள் தலைவர் விஜேந்திரன், செயலாளர் செந்தில்குமார், பொருளாளர் சென்னவராயபெருமாள், துணைத்தலைவர்கள் வெங்கடேசன், விநாயகம், துணைச் செயலாளர்கள் வெங்கடேசன், சுரேஷ், ஆலய ஆலோசகர்கள் சுப்பிரமணி, சங்கர், ஆலய கௌரவ நிர்வாகிகள் லோகநாதன், சரவண மூர்த்தி, சசிதரன் உட்பட ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள், கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பந்தக்கால்நடுதல், பக்தர்களுக்கு காப்புகட்டுதல், அனுக்ஞை, விக்னேஷ்வர பூஜை, மந்திரஸ்தாபனம், சிலைகள் பிரதிஷ்டை, பிம்பசுத்தி, ரக்ஷாபந்தனம், பூர்ணாஹீதி, நாடிசந்தானம், திரிகுண்டாஹீதி, வசோத்தாரா ஹோமம், தத்வர்ச்சனை, யாத்ராதானம் மற்றும் முதல் இரண்டு கால யாகசாலை பூஜைகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது.

பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். இவ்விழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

முடிவில் மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனைவுடன் உற்சவர் சுவாமிக்கு திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி நடைபெற்றது.




01.06.2026 இராணிப்பேட்டை மாவட்டத்தில் புதிய மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றுக் கொண்ட ஆட்சியர் ந. பிரியா அவர்களை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் இராணிப்பேட்டை மாவட்ட குழுவின் சார்பில் மரியாதை நிமித்தமாக சந்தித்து சால்வை கொடுத்தும்... நீண்ட நாட்களாக மாவட்டத்தில் நிலுவையில் உள்ள வாலாஜா வட்டம் கீழ்மின்னல் மதுரா சர்வே எண் 148ல் 50 ஆண்டு காலமாக வீடுகள் கட்டி வாழ்ந்து வரும் 105 வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தக்க நடவடிக்கை எடுக்க ஆவண செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொண்டனர். இதில் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் இராணிப்பேட்டை மாவட்ட செயலாளர் தோழர் எல்.சி.மணி, பொருளாளர் சி.இராதாகிருஷ்ணன், ஆற்காடு தாலுகா செயலாளர் ஆர்.மோகன்ராஜ்,துணைத் தலைவர் ஏ. குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



## திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வெள்ளி நீர்வீழ்ச்சி அருகே சாலையில் மரம் விழுந்து போக்குவரத்து பாதிப்பு

## சுமார் 2 கிலோமீட்டர் தூரத்திற்கு வரிசையில் நிற்கும் வாகனங்கள்

## அம்மா மருந்தகங்களில் ஜீ.பே வசதி வேண்டும்




பெரும்பாலான சின்ன சின்ன கடை முதல் பெரிய நிறுவனங்கள் வரை சில்லரை தட்டுபாடுகள் நீங்கவும் எளிய முறையில் பணம் பரிமாற்றம் செய்ய ஜீ.பே வசதி அறிமுகப்படுத்தப்பட்டது ஆனால் மற்ற ஆங்கில மருந்து கடைகளில் நாம் எதிர்பார்க்கும் டிஸ்கவுன்ட் கிடைப்பது இல்லை அதனால் அரசு சார்பில் மக்கள் பயன் பெற 'அம்மா மருந்தகம்' திறக்கப்பட்டது .ஆனால் பணம் மட்டுமேகொடுத்து வாங்க வேண்டும் இங்கு ஜீ.பே வசதி இல்லை என்கிறார்கள் இதனால் மருந்துகள் வாங்கிய பிறகு சிலர் ஸ்கேன் செய்ய கேட்டால் இங்கு ஜீ.பே இல்லை என்றவுடன் வாங்கிய மருந்துகளை திரும்ப கொடுத்து விட்டு மருந்து வாங்காமல் செல்லும் நிலைமைவருகிறது அம்மா மருந்தகங்களில் ஜீ பே வசதி செய்து தரவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனிப்பார்களா என்று மக்களின் எதிர் பார்ப்பு.

## அரசு மேல்நிலைப்பள்ளி அருகே சுமார் 150 மீட்டர் தொலைவில் உள்ள 2 அரசு மதுபான கடைகளை மூடாமல் தமிழ்நாடு முதலமைச்சர் ஸீ.ஜோசப் விஜய் உத்தரவை காற்றில் பறக்க விடும் அவல நிலை.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் C. ஜோசப் விஜய் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் பள்ளிகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பொதுமக்கள் குடியிருப்பு பகுதியில் இருந்து 500 மீட்டர் தொலைவில் உள்ள அரசு மதுபான கடைகளை இரண்டு வாரங்களுக்குள் மூடப்படும் என உத்தரவிட்டார். அதன்படி தமிழ்நாடு முழுவதும் 717 மதுபான கடைகள் மூடப்பட்டது.

ஆனால் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த ஆலம்பூண்டி பகுதியில் செயல்பட்டு வரும் அரசினர் மேல்நிலைப் பள்ளி அருகே சுமார் 150 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இரண்டு அரசு மதுபான கடைகளான 11598 மற்றும் 11644 ஆகியவை இன்று வரை மூடப்படாமல் செயல்பட்டு வருகிறது. இந்த மதுபான கடைகளை மூட வேண்டும் என பலமுறை இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கைகள் வைத்து உள்ளனர்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டும் பள்ளி அருகே சுமார் 150 மீட்டர் தூரத்தில் உள்ள இந்த அரசு மதுபான கடைகளை மூடாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## மாநில அளவிலான தொழிற்பயிற்சி நிலைய விளையாட்டு போட்டிகள்: 698 வீரர், வீராங்கனைகள் பங்கேற்பு; முன்னேற்பாடுகளை தீவிரப்படுத்த ஆட்சியர் வந்தனா கார்க் உத்தரவு

**திருவண்ணாமலை: ஜீன் 2, 2026**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கான மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் திருவண்ணாமலையில் நடைபெறவுள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளை சிறப்பாக நடத்துவது தொடர்பாக விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

வரும் ஜூன் 3 முதல் 5 ஆம் தேதி வரை திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் பங்கேற்க உள்ளனர். கைப்பந்து, கால்பந்து, பால் பேட்மிட்டன், சதுரங்கம், கேரம் மற்றும் தடகளப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

மொத்தம் 436 ஆண் போட்டியாளர்கள் மற்றும் 262 பெண் போட்டியாளர்கள் என 698 பேர் பங்கேற்க உள்ளதால், அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் முறையாக ஏற்பாடு செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பல்வேறு மாவட்டங்களில் இருந்து வருகை தரும் வீரர், வீராங்கனைகளுக்கான தங்குமிட வசதி, தரமான உணவு, குடிநீர், கழிவறை உள்ளிட்ட வசதிகள் குறையின்றி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும், விளையாட்டு மைதானங்களில் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முன்னதாகவே முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், போட்டிகள் நடைபெறும் இடங்களில் மருத்துவக் குழுவுடன் அவசர சிகிச்சை ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும், பாதுகாப்பு நடவடிக்கைகளை காவல்துறை முழுமையாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், திருவண்ணாமலை அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் (மு.கூ.பொ) தனக்கீர்த்தி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ், மண்டல முதுநிலை மேலாளர் சாந்தி, மாவட்ட இளைஞர் நல அலுவலர் சண்முகப்பிரியா மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



## செங்குன்றம் நகரம் சார்பில் மாதவரம் உறவுகளுக்கு உதவும் விழா

### 5 ஆண்டுக்கு ஒரு முறை மக்களைச் சந்திக்கும் எம்எல்ஏ நாங்கள் அல்ல! எம்.எல். விஜய் பிரபு எம்எல்ஏ

**செங்குன்றம்: ஜீன் 03, 2026**

தமிழக வெற்றிக் கழகம் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம் செங்குன்றம் நகரம் சார்பில் மாதவரம் உறவுகளுக்கு உதவும் விழா செங்குன்றம் நகரச் செயலாளர் விஜி தலைமையில் செங்குன்றம் பேருந்து எதிரே நடைபெற்றது.

திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் உறுப்பினர் சேர்க்கை அணி மாநில துணை செயலாளரும் மாதவரம் சட்ட மன்ற உறுப்பினருமான எம்.எல். விஜய் பிரபு சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு கணவனை இழந்த பெண்கள், வயது முதிர்ந்தவர்கள் 100 பேருக்கு 5 கிலோ அரிசி வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்து உரையாற்றும் பொழுது, நாங்கள் மக்கள் இயக்கத்தில் செய்த நலத்திட்டங்களையே ஆட்சிக்கு வந்து பிறகும் தொடர்ந்து செய்து வருகின்றோம். இந்த நலத்திட்ட உதவி மாதந்தோறும் 1ஆம் தேதி வழங்க இருக்கின்றோம். ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு தினந்தோறும் களத்தில் நின்று பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்கின்றோம். ஒரு சில எம்எல்ஏக்களை போல் 5 ஆண்டுக்கு ஒரு முறை வாக்கு சேகரிக்க மட்டும் வரவில்லை. தொடர்ந்து மக்களுக்கு உதவி செய்கின்றோம் என்றார்.

இந்நிகழ்வில் தமிழக வெற்றிக் கழக மாவட்ட, ஒன்றிய, நகரம், ஊராட்சி, கிளைக் கழகம், மகளிரணி, இளைஞரணி நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.




## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக ச.கவிதா பொறுப்பேற்றுக் கொண்டார்.

## அனுமதியை மீறி கனிமங்கள் கடத்தினால் கடும் நடவடிக்கை கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் எச்சரிக்கை

**திருவண்ணாமலை: ஜீலை 2, 2026**

தமிழகம் முழுவதும் செயல்பட்டு வரும் கல்குவாரிகளில் சோதனை நடத்தவும், அரசால் அனுமதிக்கப்பட்ட எல்லை மற்றும் அளவுகளுக்குள் மட்டுமேகுவாரி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், விதிமீறலில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது செயல்பட்டு வரும் அனைத்து கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்களும், உரிமம் வழங்கப்பட்ட பகுதிகளில் இருந்து வெட்டியெடுக்கப்படும் கனிமங்களை வாகனங்களில் கொண்டு செல்லும்போது, இணையவழியில் வழங்கப்படும் நடைச்சீட்டு (Despatch Slip) மற்றும் இடைக்கடவுச் சீட்டு (Transit Pass) ஆகிய பாதுகாப்பு ஆவணங்களை (Security Papers) கட்டாயமாக பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், கனிமங்களை ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு வாகனத்திலும், எடுத்துச் செல்லப்படும் கனிமங்களின் அளவிற்கு ஏற்ப நடைச்சீட்டு மற்றும் இடைக்கடவுச் சீட்டு கட்டாயமாக வைத்திருக்க வேண்டும். அரசால் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் கனிமங்களை ஏற்றிச் செல்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனிமங்கள் கொண்டு செல்வதில் விதிமீறல்கள், நடைச்சீட்டு இல்லாமல் போக்குவரத்து மேற்கொள்வது, அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக கனிமங்களை ஏற்றிச் செல்வது, அல்லது குத்தகை உரிமம் வழங்கப்பட்ட எல்லைக்கு அப்பால் குவாரி பணிகளில் ஈடுபடுவது போன்ற செயல்கள் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை உட்பட கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் எச்சரித்துள்ளார்.

அரசின் விதிமுறைகளை முழுமையாக பின்பற்றி செயல்படுவதன் மூலம் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுவதோடு, சட்டவிரோத கனிமக் கடத்தலையும் தடுக்க முடியும் என்றும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.





# தமிழக விவசாயிகளின் பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டி கோஷங்கள் மற்றும் ஒப்பாரியுடன் கண்டன ஆர்ப்பாட்டம்!

தமிழக முதல்வர் அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையான பயிர் கடன் தள்ளுபடி அறிவிக்கவில்லை என்றால் தலைமைச் செயலகத்தை முற்றுகை இட பரிசீலனை செய்யப் போவதாகவும் மேலும் இலவச மின்சாரம் எப்படி உயிர் தியாகம் செய்து விவசாயிகள் பெற்றார்களோ.. அதுபோன்று போராட்டங்கள் பயிர் கடன் தள்ளுபடி பெறுவதற்காக நடத்தப்படும் எனவும்

பயிர் கடன் தள்ளுபடி இல்லாத பிற மாநிலங்களில் விவசாயிகள் தற்கொலை நடைபெற்று வரும் நிலையில் தமிழகத்தில் விவசாயிகளை தற்கொலையிலிருந்து காப்பாற்றும் விதமாக அனைத்து விவசாயிகளுக்கு முழுமையான பயிர் கடன் தள்ளுபடியை அறிவிக்க வேண்டும் தமிழக அரசு என தமிழக விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் உதயகுமார் பேட்டி

இராணிப்பேட்டை மாவட்டம் முத்துக்கடை பேருந்து நிலையம் அருகே தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் தேர்தல் கால வாக்குறுதியாக அளித்த சிறு குறு விவசாயிகளுக்கு முழுமையான கடன் தள்ளுபடி பெரும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் கடன் தள்ளுபடி என்ற அறிவிப்பை நடைமுறைப் படுத்தாமல் நிபந்தனைகளுடன் கூடிய பயிர் கடன் கடத்தள்ளுபடி அறிவிப்பை வெளியிட்டு இருப்பதை கண்டித்தும் தேர்தல் வாக்குறுதி மட்டுமல்ல அனைத்து விவசாயிகளில் கடன்களையும் முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு விவசாய சங்கத்தினர் தமிழக அரசை கண்டித்து ஒப்பாரி வைத்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது செய்தியாளர்கள் சந்திப்பில் ஈடுபட்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் உதயகுமார்

தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அறிவித்திருக்கும் பயிர் கடன் தள்ளுபடி விவசாயிகளை பெரும் வருத்தத்திற்கு உள்ளாக்கி இருப்பதாகவும் இதனை தமிழ்நாடு விவசாய சங்கத்தினர் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என தெரிவித்தார்.

கடந்த ஆட்சியாளர்கள் விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை பெருமளவு நிறைவேற்றி இருக்கும் நிலையில் ஆனால் தற்போது ஆட்சியில் அமர்ந்திருக்கும் ஜோசப் விஜய் சிறு குறு விவசாயிகளுக்கு முழுமையான கடன் தள்ளுபடி எனவும் பெரும் விவசாயிகளுக்கு 50% கடன் தள்ளுபடி என வாக்குறுதியாக அளித்துவிட்டு தற்போது 50000 கடன் பெற்றவர்களுக்கு மட்டும் முழுமையான கடன் தள்ளுபடி என்பது போன்ற நிபதனைகள் விதித்திருப்பது விவசாயிகளை ஏமாற்றி வஞ்சிப்பது போன்றது இதனை தமிழ்நாடு விவசாய சங்கம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது என தெரிவித்தார்.

தமிழ்நாடு விவசாய சங்கத்தின் ஒற்றைக் கோரிக்கை சிறிய விவசாயிகளுக்கு சிறிய நஷ்டம் பெரிய விவசாயிகளுக்கு பெரிய நஷ்டம் ஏற்படும் நிலையில் அனைத்து விவசாயிகளின் கடனையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றார்

ஜூலை ஐந்தாம் தேதி சென்னையில் உழவர் தின பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறும் பொழுது தலைமைச் செயலகத்தை முற்றுகை இடுவதற்கான பரிசீலனையும் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

விவசாயிகளின் மீது பற்றும் பாசமும் தமிழக முதல்வருக்கு இருப்பதாக இருந்தால் அனைத்து விவசாயிகளின் கடனையும் முழுமையாக ரத்து செய்ய வேண்டும் உரம் டீசல் விவசாயத்திற்கு ஆள் பற்றாக்குறை வனவிலங்குகளால் பாதிப்பு போன்ற பெரும் நஷ்டத்தை விவசாயிகள் சந்தித்து வரும் நிலையில் பயிர் கடன் தள்ளுபடி என்பது காலத்தின் கட்டாயம் என்ற நிர்பந்தம் தமிழக அரசுக்கு உள்ளது.

பயிர் கடன் தள்ளுபடி இல்லாத மாநிலங்களில் விவசாயிகளின் தற்கொலை நடைபெற்று வரும் நிலையில் தமிழகத்தில் பயிர் கடன் தள்ளுபடி இருப்பதன் காரணமாக விவசாயிகள் தற்கொலை இல்லாமல் இருந்து வருகிறது எனவே விவசாயிகளை தற்கொலையிலிருந்து காப்பாற்றும் விதமாக அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையான பயிர் கடன் தள்ளுபடியை அறிவிக்க வேண்டும் அதுவரையில் போராட்டங்கள் ஓயாது என எச்சரிக்கை செய்தார்.

மேலும் விவசாயிகளுக்கு மின்சார பெறுவதற்காக எப்படி உயிர் தியாகங்கள் நடைபெற்றதோ அது போன்று முழுமையான பயிர் கடன் தள்ளுபடி போராடி பெற்றே தீர்வோம் என தெரிவித்தார்.





# செங்குன்றம் சர்வீஸ் சாலையில் வாகனங்களை நிறுத்தி பழுது பார்ப்போர் மீது போக்குவரத்து காவல்துறை நடவடிக்கை எடுக்கப்படுமா?

**செங்குன்றம்: ஜூன் 03, 2026**

மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் ஊராட்சியில் துவங்கும் சர்வீஸ் சாலையின் வழியாக சென்னைக்கும், வடகரை சிக்னல் முதல் பாடியநல்லூர் வழியாக ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் பாதையாகும்.

செங்குன்றம் கூட்ரோட்டில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டாலோ, அவசர காலத்திற்கு ஆம்புலன்ஸ் உள்ளிட்ட வாகனங்கள் செல்வதற்கோ இரு, மூன்று, நான்கு வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் இந்த சர்வீஸ் சாலையை பயன்படுத்துவது வழக்கம்.

செங்குன்றம் வடகரை சிக்னல் முதல் பாடியநல்லூர் கூட் ரோடு வரையும், பாடியநல்லூர் கூட் ரோடு முதல் வடகரை சிக்னல் வரையும் இரு பகுதிகளிலும் மெக்கானிக் ஷெட் (வாகனங்கள் பழுது பார்ப்போர்) சர்வீஸ் சாலையை ஆக்கிரமித்து சர்வீஸ் சாலையிலேயே ரிப்பேர் செய்து வருகின்றனர். முக்கியமாக கூட் ரோடு முதல் பாலவாயல் ஜங்ஷன் வரையிலும், பாலவாயில் சிக்னல் முதல் கூட் ரோடு வரையிலும் அதிகமான வாகனங்கள் சர்வீஸ் சாலையிலேயே நிறுத்தப்பட்டு ரிப்பேர் செய்யப்படுகின்றது. இதனால் விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படும் அபாயமும் அதிகமாக உள்ளது என பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

பள்ளிக்குச் செல்லும் வாகனங்கள், அவசர தேவைக்காக மருத்துவமனைக்கு செல்லக் கூடியவர்கள், ஆம்புலன்ஸ் உள்ளிட்டவைகள் இச்சாலையில் பயணிப்பது மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றன.

எனவே போக்குவரத்து காவல்துறை உடனடி நடவடிக்கை எடுத்து சர்வீஸ் சாலையில் வாகனங்களை நிறுத்தி பழுது பார்ப்போர் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், சாலையில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களை உடனடியாக அப்புறப்படுத்தி பொதுமக்கள் எளிதாக பயணிக்கும் வகையில் சாலையை ஒழுங்கமைத்து தரவும்,

அதேபோல போக்குவரத்து காவல்துறை தொடர்ந்து கண்காணித்து சாலையில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு அபராதமும் விதிக்க வேண்டுமென்றும் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கோரிக்கை வைத்துள்ளனர்.



# அனைத்து வகை தனியார் பள்ளிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

வேலூர் மாவட்டம் காந்திநகர் காட்பாடியில் உள்ள SSA அலுவலகத்தில் இன்று அனைத்து வகை தனியார் பள்ளிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) திரு. ரமேஷ் பாபு தலைமைதாங்கினார். இதில் கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்கக அலுவலர் திரு. ஜோதிஸ்வரபிள்ளை, திறன் இந்தியா மேம்பாட்டு திட்டத்தின் உதவி திட்ட அலுவலர் திருமதி காயத்ரி, RTO ஆய்வாளர் திரு. ராஜ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கூட்டத்தில் பள்ளிப் பேருந்துகள் மற்றும் வேன்களில் பயணிக்கும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய அவசியம் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், மாணவர்களுக்கு போக்குவரத்து வசதி வழங்கும் பள்ளிகள், தமிழ்நாடு பள்ளி வாகனங்கள் (ஒழுங்கு மற்றும் கட்டுப்பாடு) சிறப்பு விதிகள் 2012 ன் கீழ் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றுவதாக உறுதிமொழிப் படிவங்களை சமர்ப்பித்தன.

அனைத்து தனியார் பள்ளிகளும் தங்களது கல்விக் கட்டண விவரங்களை பள்ளி வளாகத்தில் உள்ள அறிவிப்புப் பலகையில் தெளிவாக காட்சிப்படுத்த வேண்டும் என மீண்டும் வலியுறுத்தப்பட்டது. அதற்கான புகைப்பட ஆதாரத்துடன் உறுதிமொழிப் படிவங்களையும் சமர்ப்பிக்குமாறு பள்ளி நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான ஐ.டி.ஐ. துறையில் உள்ள உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

வரவிருக்கும் கல்வியாண்டை முன்னிட்டு பள்ளிகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு முன்பாக, பள்ளிகளின் சுமூகமான மற்றும் பாதுகாப்பான செயல்பாட்டை உறுதி செய்ய தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும் என பள்ளி நிர்வாகங்களுக்கு அதிகாரிகள் அறிவுறுத்தினர்.



# இளையராஜா பிறந்தநாள்: முதல்வர் விஜய் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து

**சென்னை:**

இசைஞானி இளையராஜாவின் பிறந்த நாளுக்கு முதல்வர் விஜய் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது வாழ்த்துக்களை பகிர்ந்துள்ளனர்.

தமிழக முதல்வரும் தவெக தலைவருமான விஜய் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: தேனி மாவட்டம், பண்ணைப் புரம் என்ற கிராமத்தில் பிறந்து, தனது சகோதரர்களுடன் இசைப் பயணத்தைத் தொடங்கி, அன்னக்கிளி என்ற திரைப் படத்தின் மூலமாக திரைத் துறையில் கால் பதித்து, உலகப் புகழ்வாய்ந்த சிம்பொனி இசை வரை பல சாதனைகளைப் படைத்து, இசை உலகின் மகுடமாகத் திகழ்ந்து வரும் இசைஞானி இளையராஜா தமிழ்நாட்டிற்குப் பெருமைசேர்த்து வருகிறார்.

உங்கள் இசை இன்னும் பல தலைமுறைகளுக்கு வழிகாட்டும் ஒளியாகவும், ஊக்கமாகவும் தொடர்ந்து ஒலிக்கட்டும். தமிழர்களின் பெருமையாக விளங்கும் தங்களுக்கு எங்களின் அன்பும், மரியாதையும் கலந்த இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துகள்! என்று முதல்வர் விஜய் கூறியுள்ளார்.

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: இசையால் நம்மைஎன்றென்றும் ஆளும் இசைஞானிக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!. கருணாநிதி மீது கொண்ட மதிப்பின் காரணமாகத் தனது பிறந்த நாளையே ஒரு நாள் முன்னதாக மாற்றிக் கொண்டவர். 'இசைஞானி' என்று கருணாநிதி பட்டம் சூட்டினார். அன்னக்கிளியில் தொடங்கி சிம்பொனி வரையிலான ராஜாவின் ராஜாங்கம் தொடரட்டும். ராஜா என்றும் ராஜாதான்! என்று ஸ்டாலின் கூறியுள்ளார்.

பாமக தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: 'எங்களின் இசை மருத்துவரும், உலகின் தலை சிறந்த இசையமைப்பாளருமான இசைஞானி இளையராஜா 84ம் பிறந்த நாளை இன்று கொண்டாடும் நிலையில், அவருக்கு எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இசைஞானியின் தனிச் சிறப்பு என்னவென்றால், தாய், தந்தை, குடும்பத்தினர், நண்பர்கள் உள்ளிட்ட அனைவரையும் விட, இசையாய் மிக அதிக நேரம் ஒவ்வொருவருடனும் இணைந்திருப்பது தான். இளைய ராஜா படைப்புகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மன சஞ்சலங்கள், மன அழுத்தங்கள் உள்ளிட்ட அனைத்து சிக்கல்களுக்கும் இலவச மருத்துவமாக அமைவது அவரது இசைதான்.

இசைஞானியின் இசைத் தொண்டு காலங்களைக் கடந்து தொடர வேண்டும். இசைஞானி நூற்றாண்டுகளைக் கடந்து வாழ்ந்து இசையால் இனிவரும் தலைமுறைகளையும் மகிழ்விக்க வேண்டும் என்று அன்புமணி கூறியுள்ளார்.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: 'இசை உலகின் ஈடு இணையற்ற மாமேதையாகவும், கோடிக் கணக்கான மக்களின் மனங்களை தன் உணர்வுப்பூர்வமான இசையால் ஆட்கொண்டிருப்பவருமான இசைஞானி இளையராஜாவின் பிறந்த தினம் இன்று.

கிராமிய இசையில் தொடங்கி மேற்கத்திய இசை வரை தன்னுடைய தனித்திறமையால் கோலோச்சி, காலம் கடந்தும் நிற்கும் காவியங்களைப் படைத்துக் கொண்டிருக்கும் இசைஞானி இளையராஜா, நீண்ட ஆயுளோடும், பூரண உடல் நலத்தோடும் தனது இசையால் மக்களை மகிழ்விக்க வேண்டும் என எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்று டிடிவி தினகரன் கூறியுள்ளார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், தமிழக வெற்றிக் கழக தலைவர், C.ஜோசப் விஜய் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநில கழகப் பொது செயலாளர் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் N.ஆனந்த் மற்றும் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் வருவாய்த்துறை அமைச்சர் K.A.செங்கோட்டையன் ஆகியோரின் அறிவுறுத்தலின் படியும், மாவட்ட கழக செயலாளர் கார்த்திக்ராஜன் ஆலோசனைப்படி, Dr.M.பிரவீன்குமார் MBBS, MDRD அவர்களின் தலைமையில் நீர்மோர் பந்தல் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இந்நிகழ்வில் நகர செயலாளர் மிதுன் மனோகரன், கழக மூத்த நிர்வாகி மகுடீஸ்வரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் இக்பால், கழக நிர்வாகிகளான நெய்க்காரப்பட்டி இஜாஸ், சங்கர், ஜவஹர், கோபாலன், விக்டர், மாரிமுத்து, ா.றீ.சிவபாலன், மூ.ய.சஞ்சய், கண்ணன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, சார்பு அணி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No.1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District) - 621316 EDITOR: K.LOGANATHAN